முற்பகல் 10-30

5. பேரவைக் குழுக்கள் ஆற்றிய பணிகளுக்குப் பேரவைத் தலைவர் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிக் குழு மற்றும் ஏனைய குழுக்களின் உறுப்பினர்களையும், அந்தந்தக் குழுக்களின் தலைவர்களையும் நான் இந்த ஆண்டு பெரிதும் பாராட்ட விழைகிறேன். காரணம், இதற்கு முன்னர் இருந்ததைவிட அதிகமான அறிக்கைகளை ஆய்வுசெய்து பேரவைக்கு அளித்திருக்கிறீர்கள். அந்த அளவில் குழுக்களின் தலைவர்களுக்கும், குழு உறுப்பினர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்கள், பாராட்டுக்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) குழுவிலேயே தலைவராக இல்லாத பெரியசாமி நன்றாகத் தட்டுகிறார். (சிரிப்பு)

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு, **1995**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) *நகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, **1995***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு மற்றும் நகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு இரண்டையும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை —பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று புதிதாக அறிமுகம் செய்யப்பட்டு இருக்கின்ற சட்டமுன்வடிவுகள், விதியைத் தளர்த்தி, இன்றைக்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரு சட்டங்களும் முக்கியமான சட்டங்கள். விவாதிக்கப்பட வேண்டிய சட்டங்கள். இதை அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றுவது என்பது பயன் அளிக்காது. ஆகவே, இந்தச் சட்டம் குறித்த விவாதத்தை ஒத்திவைத்து, பிறகு தனியாக எடுத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவரவர்கள் பொறுத்தருள வேண்டும். மூன்று சட்டமுன்வடிவுகள் இன்றைக்கு அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த 3 சட்டமுன்வடிவுகளும் இன்றைக்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றால், அவ்வாறு பேரவையின் விதிகளைத் தளர்த்தி எடுத்துக் கொள்கிற வழக்கத்தை சில நேரங்களில் கடைப்பிடித்திருக்கிறோம். ஆனால், இவ்வாறு சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்கிறபோது, முதல்நாளே, உறுப்பினர்களுக்கு அவை சுற்றனுப்பப்படுகின்றன. இந்தச் சட்டமுன்வடிவுகளைப் பொறுத்தமட்டில், நேற்றையதினம் எனக்கு வழங்கப்பட்டதற்குப் பிறகு, நேற்று இரவுதான் உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்பட்டிருக்கின்றன. பொதுவாக, குறைந்த கால அளவுக்குள் எடுத்துக் கொள்கிறபோது, இரண்டு நாள் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிப்பது வழக்கம். அந்தச் சட்டமுன்வடிவுகளில், அவர்கள் சில திருத்தங்கள் கொடுப்பதற்கு வாய்ப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட